**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.59/2024 – PW- 2**

| | |
|---|---|
| Name | திரு. விநோத் |
| Husband/Father Name | ரகு |
| Village /Area | மின்னல் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | கூலி |
| Age | 31 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 19.07.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 28.06.2021 ஆம் ஆண்டு பிற்பகல் 02.00 முதல் 3.00 மணியளவில் நானும் பஸ்வானும் எனது நண்பர் பரத் என்பவரும் அன்வர்திகான் பேட்டையில் உள்ள கடைக்கு இருசக்கர வாகனத்தில் சென்று விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தோம். பைக்கை நான் தான் ஓட்டினேன். எனக்கு பின்னால் பரத்தும் அதற்கு பின் பஸ்வானும் அமர்ந்திருந்தார்கள். ஆவதம் மாரிமங்கலம் இடையே உள்ள பெட்ரோல் பங்கிற்கு அருகே நாங்கள் வரும் போது அங்கிருந்த சுமார் 7 நபர்கள் எங்களை மடக்கி நிற்க வைத்தார்கள். அன்பரசன் என்பவர் பின்னால் அமர்ந்திருந்த பஸ்வானில் முதுகில் ஓங்கி ஒரு குத்து குத்தினார். பிறகு பஸ்வானின் முடியை பிடித்து அன்பரசன் இழுத்து சென்றார். சத்திய மூர்த்தி என்பவர் கையில் கடப்பாறை வைத்திருந்தார். அவர் பஸ்வானின் தலையில் கடப்பாறையில் அடித்து விட்டார். அங்கிருந்த 7

நபர்களும் கத்தி, கடப்பாறை, பாட்டில், கட்டை, கொம்பு வைத்திருந்தார்கள். பிறகு அஜித் என்பவர் அவர் கையில் வைத்திருந்த கத்தியை வைத்து பஸ்வானை முதுகிலும் மேற்படி மூவரும் முதுகு, வயிறு மற்றும் காலிலும் தாக்கினார்கள். எதிரி அஜித் கத்தியால் பஸ்வானின் முட்டி காலில் வெட்டினார். புஜ்ஜி என்பவர் கல்லை தூக்கி வந்து பஸ்வானின் முதுகு, கை மற்றும் உடலில் மற்ற பாகங்களில் குத்தினார். மேலும் அவர்களுடன் இருந்த 3 நபர்களும் சேர்ந்து பஸ்வானை தாக்கினார்கள். நானும் என்னுடன் இருந்த பரத்தும் என்ன செய்வதன்று தெரியாமல் பஸ்வான் அருகில் செல்ல பயந்து கொண்டு துராமாக தள்ளி நின்று கொண்டோம். பஸ்வான் மூச்சி பேச்சின்றி கீழே சரிந்துவிட்டார். பிறகு மேற்படி 7 நபர்களும் சேர்ந்து என்னையும் பரத்தையும் கத்தியால் மற்ற ஆயுதங்களால தாக்குவதற்காக அசிங்கமான வார்த்தைகளால் ங்கோத்தா எங்களிடம் வைத்து கொண்டால் உங்களையும் சாகடித்து விடுவோம் என்று கூறி துரத்தினார்கள். நாங்கள் பயந்து கொண்டு வண்டியை எடுத்து ஓடி வந்து பஸ்வானின் தந்தையிடம் சம்பவத்தை பற்றி தெரிவித்தோம். அங்கிருந்து வந்த பார்த்தவர்கள் அவர் பேச்சு, மூச்சி இல்லாமல் இறந்து விட்டிருப்பதாக தகவல் தெரிவித்தார்கள். இது சம்பந்தமாக பஸ்வானின் தந்தை மணி என்பவர் கொடுத்த புகாரின் பேரில் என்னை போலீசார் விசாரணை செய்தார்கள். மேற்படி சம்பவத்தில் ஈடுபட்ட ஆஜர் எதிரிகளில் 1 வது எதிரி அன்பு, 2 வது சூரிய மூர்த்தி, 5 வதாக நிற்கும் எதிரி அஜீத், 7வதாக நிற்கும் எதிரி புஜ்ஜி என்று அழைப்பார்கள் அவரின் உண்மையான பெயர் தெரியாது. மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கும் மற்ற எதிரிகளும் சம்பவ இடத்தில் மற்ற எதிரிகளுடன் இருந்தார்கள் அவர்களின் பெயர் எனக்கு

தெரியவில்லை. என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புளூ கலர் கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்றும், மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி மற்றும் மரப்பிடியுடன் கூடிய கத்தி ஆக 3 கத்திகள் சம்பவத்தின் போது எதிரிகள் பயன்படுத்தி நான் பார்த்த கத்திகள் தான் அது சா.பொ.1 முதல் சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இதனுடன் 2 கத்திகள் எதிரிகள் பயன்படுத்தியதை நான் பார்த்தேன். மேலும் நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கபடும் எதிரிகள் பயன்படுத்திய இரும்பு ராடுகள் 3 மற்றும் 2 ரீப்பர் கட்டைகள் சம்பவத்தின் போது எதிரிகள் பயன்படுத்தியதை நான் பார்த்தேன். அந்த 3 இரும்பு ராடுகளில் ஒரே அளவு கொண்ட 2 இரும்பு ராடுகள் சா.பொ. 4 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. 1 இரும்பு ராடு சா.பொ.5 ஆக குறியிடு செய்யப்படுகிறது. அந்த 2 ரீப்பர் கட்டைகள் சா.பொ. 6 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: மனுவின் பேரில் குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்படுகிறது.**

**ஒம்./-திருமதி. கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**